வேண்டுமோ அதைத்தான் எடுத்துக்கொள்கிறோம். இதுமாதிரி மற்ற நாடு களுக்கு வெல்லம் வேண்டுமென்றால் அனுப்புகிறோம். வேண்டாமென் றால் அவர்கள் தலையிலே கட்டமுடியாது.

SRI R. SWAMINATHA MERKONDAR : ஸார், தற்போது வெல் லத்தின் விலை குறைந்திருக்கிறது. அது அதிகமாக நமது நாட்டிலே கரும்பு சாகுபடி செய்வதால், ஓரளவு குறைந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். ஆதலாலே, கரும்பு உற்பத்தி செய்வதை ஓரளவு கட்டுப்படுத்தி, ஒருவர் இத்தனை ஏக்கர் தான் உற்பத்தி செய்யலாம் என்று கட்டுப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன், நம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் உற்பத்தி அதிகம் என்று சொல்வதற்கில்லை என்று. ரொம்பக் குறைவாகவே உற்பத்தி ஆகிறது. ஆகவே இதைத் தடுக்க வேண்டிய நிர்ப்பந்தமே இல்லை.

Unemployment

* 1830 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether any survey has been conducted to find out the number of unemployed persons among the educated as well as the uneducated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Sir.

SRI N. K. PALANISAMI : வேலை இல்லாத்திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களில் படித்தவர்கள் எத்தனை பேர்கள் என் பதை பரிசீலனை செய்து, எத்தனை பேருக்கு வேலை கொடுக்க முடியுமென் பதற்கு சர்க்கார் பாதுகாப்பளித்து, எத்தனை பேர்களிடையே வேலை இல்லாத் திண்டாட்டத்தை குறைக்க முடியுமென்று கணக்கெடுப்பதற்கான நட வடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எம்ப்ளாய் மெண்டு எக்ஸ்சேஞ்சில் ரிஜிஸ்தர் செய்து கொண்டிருப்பவர்களைப் பற்றி டெல்லியிலே ஒரு அட்ஹாக் கமிட்டி சர்வே நடத்தியது. அதன்படிப் பார்த்தால் மொத்தத்திலே எவ்வளவு பேர்கள் வேலை இல்லாமல் ரிஜிஸ் தர் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், 4-ல் ஒரு பங்கு தான் ரிஜிஸ்தர் செய்திருப்பதாகத் தெரிகிறது. 1961 பெப்ரவரி கடைசியில் 127,275 பேர்கள் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் மொத்தம் வேலை இல்லா தவர்கள் 5 லட்சம் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இதோடு புதிதாக வேலை இல்லாதவர்களும் வந்து சேருகிறார்கள். 1960 ஏப்ரல் 1-ம் தேதி மெட்ரிகுலேஷன், அதற்கு மேற்பட்ட பரீட்சை படித்தவர்களி டையே வேலை இல்லாது இருக்கிறவர்கள் எவ்வளவு பேர்கள் என்று பார்த்தால் 24,754 என்று இருக்கிறது.

Employment exchange.

* 1831 Q.—SRI K. VINAYAKAM (on behalf of SRI S. M. ANNAMALAI) : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் வேலை தேடித்தரும் அலுவலகத்தின் மூலமாக எத்தனை மாநில லோயர் டிவிஷன் குமாஸ்தாக்கள் (L.D.C.) மத்திய சர்க்கார் உத்தியோகத்திற்கு அனுப்பப்பட்டார்கள் ?

(இ) இதைக் குறித்து மத்திய சர்க்காரின் உத்தரவு வந்துள்ளதா ? அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The number of persons sent by the Employment Exchanges for recruitment as lower division clerks in the Central Government Offices during the year 1960 was 6,690 (six thousand, six hundred and ninety).